# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 189/2023**

**Prosecution Witness : P. W. 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : புவனேஸ்வரி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 23/03/2026

A1, A2 absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்) – நேரடியாக சாட்சி ஆஜராகவில்லை. இணைய வழி மூலம் நீதிமன்ற விசாரணையில் கலந்து கொண்டார்.**

நான் தற்போது அயல்பணியாக உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் கண்காணிப்பு பிரிவில் ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு செங்குன்றம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணியிலிருந்த போது, புகார்தாரர் சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று பின்னர் அதே தேதியில் நான் முதல் தகவல் அறிக்கை எண் 43/2023 பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவயிடம் சென்று சாட்சிகள் மணிவண்ணன் மற்றும் கண்ணன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியை தேடி வந்த நிலையில், 28.01.2023ம் தேதி 13.10

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

மணிக்கு கோணிமேடு சந்திப்பில் வைத்து எதிரிகளை கைது செய்தேன். மேலும் அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தை பட்டியல் சாட்சிகள் மைக்கேல் ராஜ் மற்றும் செங்கொடி அப்பு ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, அதன் அடிப்படையில் செல்போன் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அதனை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர், படிவம் 9 1 ஆகியவை முறையே அசா.ஆ.5,6,7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

புகார்தாரர் தான் கைப்பட புகாரை எழுதிக் கொடுத்தார். புகாரில் அடையாளம் தெரியாத நபர் என்று சொல்லியிருக்கிறார் என்றால், சரிதான். பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று சொல்லியுள்ளார். வழக்கு சொத்து புகார்தாரருக்கு சொந்தமானது என்று காட்ட ஆவணம் பெறவில்லை என்றால், சரிதான். ஒரு நாள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், இரவு 10.30 மணியளவில் திருடு போனது குறித்து மறுநாள் காலை 8.30 மணிக்கு புகார் கொடுத்ததால் தாமதம் எதுவும் இல்லை. சம்பவம் நடந்தது இரவு என்றால், சரிதான். புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தான் சம்பவயிடம் சென்றேன். அனைத்து சாட்சிகளையும் நான் தான் விசாரித்தேன். மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்ட வீடுகளில் உள்ளவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். எதிரிகளிடம் எங்கு வைத்து ஒப்புதல் வாக்குமுலம் பெற்றேன் என்றால், திருவள்ளூர் ைஹரோடு ஆலமரம் என்ற இடத்தில் வைத்து வாங்கினேன். தட்டச்சு செய்தேனா அல்லது கையில் எழுதினேனா என்றால், தட்டச்சு செய்தேன். காவல் நிலையத்தில் வைத்து தான் பிரிண்ட் அவுட் எடுத்தேன் என்றால்,

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

சரிதான். அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால், சரிதான். கைப்பற்றிய அலைபேசி அனைத்து கடைகளிலும் கிடைக்கக்கூடியது என்றால், சரிதான். நான் சம்பவயிடமே செல்லாமல் நிலையத்திலேயே அனைத்து மேஜை வேலைகளையும் செய்து தவறான விவரங்களுடன் சம்பவயிட சாட்சிகளை சேர்க்காமல், இறுதி விசாரணை அறிக்கையை எதிரிகள் மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA